20th April 1960]

SRI K. ANBAZHAGAN : இந்த தள்ளு வண்டிகள், பார வண்டிகள் இழுப்பவர்களுக்கு லைசன்ஸ் வழங்கப்பட்டிருக்கிறதா ? அப்படி இந்த வேலையில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு அரசாங்கம் நடத்தும் எந்தத் தொழிற்சாலையிலாவது, அரசாங்கம் நடத்தும் தொழிற் சாலைகளில் உடல் உழைப்புத் தேவைப்படுகிற இடங்களில் இவர்களுக்கு மாற்று வேலை கொடுக்க அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்தப் பிரச்னை இப்போது பரிசீலனையில் இருக்கிறது. இதை எந்த வகையில் தீர்ப்பது, அவர்களுக்குத் தகுந்த வேறு வேலைகள் எப்படிக் கொடுப்பது என்பது பரிசீலனையில் இருக்கிறது.

SRI K. VINAYAKAM: In the light of the eventual abolition of this mode of transport, viz., hand-carts, what is the alternative mode of transport which the Government suggest, apart from the costlier modes of transport like lorries and other such conveyances ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: I have just answered that there is a proposal to license liberally three and four-wheeled motor vehicles of low horse-power.

Veterinary Hospital employees

* 751 *Q.*—DR. (SRIMATHI) SATHIYAVANIMUTHU : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) சென்னை மிருக ஆஸ்பத்திரியில் 1930 லிருந்து வேலை செய்து வரும் 88 தொழிலாளர்களை நிரந்தர சர்வீசின்கீழ் கொண்டுவராமலும் வீட்டுவாடகை, எந்த வித ஓய்வும் விடுமுறையுமின்றி வைத்திருப்பது உண்மையா ?

(ஆ) அந்த தொழிலாளிகள் சங்கத்திலிருந்து விண்ணப்பம் வந்துள் ளதா ?

(இ) அப்படியாயின் அதன்மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) The 85 workers employed in the Madras Veterinary College and the Hospital are staff paid from contingencies, whereas the Union list contains the cadre strength of the Union including workers of other Institutions in the City. But all of them are not working since 1930. The rules applicable to contingent staff paid from contingencies are also applied in the case of Madras Veterinary College and Hospital workers in respect of house rent allowance, leave facilities, etc. The contingent staff are paid at market rates which generally include the element of house rent allowance. Hence the question of paying any house rent allowance to the staff paid from contingencies does not arise. The question of confirmation also does not arise for this class of workers. The question of bringing the contingent staff into regular establishment depends on the recommendation of the Pay Commission.

(*b*) A representation has been received from the President, the Madras Government Medical and Health Workers' Union, Madras.

(*c*) The matter is under examination in consultation with the heads of departments concerned.

DR. (SRIMATHI) SATHIYAVANIMUTHU : அந்த மிருக ஆஸ்பத் திரியில் பணிபுரிகிற பலர் மாடு முட்டி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறு கிறார்கள், நாய்கள் கடித்து சிகிச்சை பெறுகிறார்கள். அப்பேர்ப்பட்ட

வர்களுக்கு "சிக் லீவும்" மற்றப்படி அலவன்ஸ்களும் கொடுக்க மறுக்கப்பட்டு வருகிறது என்று கூறப்படுகிறது. மிருகஆஸ்பத்திரியில் பணி புரிகிற அவர்களையும் மிருகங்களாக சர்க்கார் கருதுகிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அவ்வாறு சர்க்காரைப் பொறுத்த மட்டில் கருதவில்லை. அவர்களைப் பொறுத்தமட்டில், அவர்களுடைய கஷ்டங்களுக்குத் தகுந்த பரிகாரம் என்ன அளிப்பது என்பது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

9 a.m. DR. (SRIMATHI) SATHIYAVANIMUTHU : நான் கூறுகிற ஒருவர், இப்பொழுது மூன்று மாதங்களாக ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார். உடனடியாக சர்க்கார் அவருக்காவது அந்த விடுமுறையோ அல்லது அதற்குரிய பணமோ தர முன் வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதைப்பற்றி என்னிடம் தகவல் இல்லை. கனம் அங்கத்தினர் அவர்கள் தனியாக கேள்வி கேட்டால் அதைப் பொறுத்து நடவடிக்கை எடுத்துக் கொள்வதோடு நிலைமையையும் எடுத்து விளக்கக்கூடும்.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, கண்டின்ஜெண்ட் தொழிலாளியாக அரசாங்கப்பணியில் மூன்று ஆண்டுகள் முதல் ஐந்து ஆண்டுகள் வரையில் பணியாற்றியவர்களை அதற்குப் பின்னால் ஊர்ஜிதம் செய்வதாக இந்த அமைச்சரவையினால் முன்னால் ஒரு தடவை பதிலளிக்கப்பட்டுள்ளது. அப்படிப்பட்டவர்கள் பத்து, பனிரெண்டு ஆண்டுகள் பணியாற்றிய பிறகு, இனியாவது அவர்களை உறுதி செய்வதற்கு, வேலையில் காயப்படுத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இது பற்றியும் சம்பளக் கமிஷன் பரிசீலனை செய்திருக்க வேண்டும். அவர்களுடைய சிபாரிசுகள் வந்திருக்கின்றன. அவர்களுடைய சிபாரிசுகள் இப்பொழுது பரிசீலனையில் இருக்கின்றன. பரிசீலனைக்குப் பிறகு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும்.

Pullambadi Channel Scheme

* 752 *Q.*—SRI T. K. SUBBIAH : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) புள்ளம்பாடி வாய்க்கால் திட்டத்தில் தனியாரிடமிருந்து எடுத்துக் கொள்ளப்பட்ட நிலங்களின் பரப்பு என்ன ?

(ஆ) அதில் எவ்வளவு நிலங்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டுள்ளது?

(இ) எத்தனை தாசில்தார்கள், ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் ?

(ஈ) முடிவாக எல்லாத் தரப்பினருக்கும் நஷ்ட ஈடு எப்போது கொடுத்து பூர்த்தி செய்யப்படும். ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) & (*b*) The Pullambadi Canal Scheme contemplates acquisition of land to a length of 52 miles under the Main Canal, 75 miles under the distributaries and 3.992 acres under tanks. Of the above extents an area of 212.55 acres under Main Canal and 264.19 acres under the tanks has been acquired so far and compensation paid to the tune of Rs. 5,97,545.

(*c*) Two Special Deputy Tahsildars and two Special Revenue Inspectors were working in this scheme up to 28th February 1959. From 1st March 1959 two Special Deputy Tahsildars are working in this scheme.